**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.93/2013**

பெயர்–திரு.சின்னராஜ் நாள்.24.03.2026

பி.வா.சா.3 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.3 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1.நான் பெரியசாலட்டி அணைக்காட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாணபத்திரிக்கையில் உள்ள விபரம் பற்றி எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தந்தை பெயர் ராமசாமி என்றால் சரிதான். எனது அம்மாவின் பெயர் அண்ணாமலைச்சி என்றால் இல்லை, மலையம்மாள். எனது தந்தை உடன் பிறந்தவர்கள் 3 பேர் என்றால சரிதான். அவர்கள் சின்னக்கவுண்டர் மற்றும் பெருமாள் . 1ம் பிரதிவாதி தங்கராஜ் சின்னாக்கவுண்டரின் மகன் என்றால் சரிதான். எனது தாயாருடன் பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர் 1. துரைசாமி, 2.குப்புசாமி, 3.பெருமாள், 4.வெள்ளையம்மாள் மற்றும் எனது தாயார் மலையம்மா. வாதி பெருமாள் எனது தாய்மாமா என்றால் சரிதான். இந்த வழக்கில் முதலில் எனக்கு ஆதராவாக வழக்கறிஞர் நந்தகுமார் ஆஜரானார் என்றால் சரிதான். தற்போது எனது வழக்கறிஞர் யார் என்றால் வழக்கறிஞர் ரமேஷ் ஆவார். சாட்சி மீண்டும் வழக்கறிஞர் முகமது முபாரக் ஆஜராகிறார் என கூறுகிறார். இந்த வழக்கில் எனது பழைய வழக்கறிஞர் 3வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தான் 3ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.5637/2022 கிரைய ஆவணம் மூலமாக கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2.என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.4 ஆவணம் தான் நான் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணத்திற்கு தாய் பத்திரம் எது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.4 ஆவணத்திற்கு தாய் பத்திரம் கிரைய ஆவண எண்.2611/2006 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.3 ஆவணம் ஆனது 1ம் பிரதிவாதி பொது அதிகார முகவர் என்ற வகையில் தாவா சொத்தை எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.3 ஆவணத்திற்கு மூல ஆவணமாக கிரைய ஆவண எண்.169/1980 ஆவணத்தை காட்டி எழுதியுள்ளோம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் ரூ.82,600/– கிரைய தொகை செலுத்தி கிரையம் பெற்றுள்ளேன். 1ம் பிரதிவாதி தங்கராஜ்க்கு எந்த தேதியில் வாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 20 வருடங்களுக்கு முன்பு எழுதி கொடுத்ததால் எனக்கு நியாபகமில்லை.

3.என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ஆவணம் தங்கராஜ்க்கு வாதி எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம். பி.வா.சா.1 ஆவணத்தை படித்து பார்த்து யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. பொது அதிகார ஆவணத்தில் அதில் கண்டுள்ள சொத்து எதன் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, பி.வா.சா.1 பொது அதிகார ஆவணம் எழுதிய போது நான் தங்கராஜ் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அன்றைய தேதியில் தங்கராஜ் உடன் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

4.மேற்படி கிரைய உடன்படிக்கை இரத்து ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணம் கிரைய உடன்படிக்கை இரத்து ஆவணம் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை இரத்து ஆவணம் 29.05.2006 அன்று எழுதப்பட்டது என்றால் இல்லை. அன்றைய தேதியில் தான் நான் தாவாசொத்தை கிரையம் வாங்கினேன். நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் விஜயன் என்றாவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.3 ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் சாட்சி விஜயன் என்பவரது என்றால் சரிதான். விஜயனின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. அதே விஜயன் தான் பொது அதிகார ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விஜயன் தான் கிரைய உடன்படிக்கை இரத்து ஆவணத்தில் 1ம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2003ல் நான் வாதியுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்தேனா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கை இரத்து ஆவணத்தில் 01.04.2003ல் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக குறிப்படப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணம் எனக்கும் வாதிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டகிரைய ஒப்பந்த ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. 1.04.2003 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் வாதிக்கு நான் எழுதி கொடுத்தது என்றால் இல்லை.

5.வாதியுடன் எனக்கு குடும்ப தகராறு உள்ளதா என்றால் பல ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை. வாதி சொத்தை நான் வாங்குவதற்கு முன்பு வில்லங்கசான்றிதழ் பார்த்தேன். வில்லங்க சான்று 2002 –2006 ஆண்டு காலத்திற்கு பார்த்தேன். 1ம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம்

இருந்தது. 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தபோது வில்லங்கம் எடுத்து கொடுத்தேன், எத்தனை ஆண்டுகளுக்டகு வில்லங்கம் எடுத்து கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது, தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள முழு வில்லங்க விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் உள்ளது என்பது எனக்கு தெரியும்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது,.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.24 18:10:31 +0530

District Munsif